**வெல்லவாய பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 13 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெல்லவாய பிரதேச சபையின் நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 5,300,415 ஆக இருந்த போதிலும் அது ரூபா 9,800,415 என கணக்கு வைக்கப்பட்டமையினால் ரூபா 4,500,000 இனால் வருமானம் அதிகரித்துக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2006 ஏப்ரல் 10 ஆந் திகதி ஒன்றிணைந்த கிராம அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் சபைக்கு வழங்கப்பட்ட 32-1134 ஆம் இலக்க ஜீப் வாகனத்தை சபை கையேற்று, மதிப்பிட்டு கணக்குகளுக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமும் ஏடுகளின் பிரகாரமும் பொது வைப்புக் கணக்கில் ரூபா 2,989,430 தொகையான வேறுபாடு திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்த போதிலும் நடப்பாண்டின் போதும் இந்த வேறுபாட்டிற்கான காரணத்தைக் கண்டறிந்து சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்களில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 226,525 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 432,011 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

---

(அ) 1988 முதல் 2000, 2002 முதல் 2008 மற்றும் 2010 முதல் 2011 போன்ற 21 வருடங்களுக்காக சபையினால் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 401,716 ஆக இருந்தது. கணக்குகளில் நானாவித கடன்கொடுத்தோரின் கீழ் அதற்காக ரூபா 372,359 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையும் கணக்காய்வுக் கட்டணத்தை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல வருட காலத்தில் சபையின் பல்வேறு கட்டிடங்கள் மற்றும் இடங்களுக்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,069,392 தொகையான நீர்க்கட்டணம் தீர்க்கப்படாது மீதி முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்புப் பண மீதி ரூபா 945,320 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அந்த மீதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 திசெம்பர் 24 ஆந் திகதிய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் பெறுமதி சேர் வரி இரத்துச் செய்யப்பட்டதன் அடிப்படையில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முன்னர் அறவிடப்பட்ட வரித்தொகை செலுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 மார்ச் வரை அறவிடப்பட்ட ரூபா 1,816,234 பெறுமதியான பெறுமதி சேர் வரி செலுத்த வேண்டிய வைப்பாக கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(உ) வாடகை வீடுகளில் வாழ்ந்து வரும் நபர்களினால் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை சபையில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 63,585 தொகையான வீட்டு வாடகைக்குரிய தரப்பினரை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட்ட ரூபா 184,636 பெறுமதியான முத்திரைக் கட்டணம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

---

பல வருட காலமாக அறவிடாது காணப்பட்ட தற்போது சேவையிலில்லாத 60 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 142,890 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 190,058,262 கூட்டுத்தொகையான 03 சொத்து விடயங்களையும், ரூபா 25,076,972 தொகையான 02 பொறுப்பு விடயங்களையும் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| (i) | 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 50,789,622 கூட்டுத்தொகையான நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | 136 ஆம் பிரிவு | சபைக்குச் சொந்தமான கடை வாடகை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | 237 | பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 707,294 பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக இருப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 சனவரி 25 ஆந் திகதிய 12/ஆ/06 மேலதிக எரிபொருள் ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் சபையின் கப் வாகனத்திற்கு ஒதுக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் அளவு 312 லீற்றராகும். அந்த அளவினை மிகைத்து பயன்படுத்தப்பட்ட 200 லீற்றர் எரிபொருளுக்காக மொனராகலை உதவி ஆணையாளரின் அங்கீகாரமும் அதனை விட அதிகரிக்கின்ற லீற்றர் அளவிற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரமும் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் இன்றி ரூபா 256,870 தொகை பெறுமதியான 2,117.66 எரிபொருள் லீற்றர் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் 17 கொள்வனவுக் குழுக்கூட்டம் நடாத்தப்பட்டு ஒரு கூட்டத்திற்கு ரூபா 750 படி ரூபா 63,750 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், படிகளை வழங்கும் போது கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.9.1 இன் பிரகாரம் வரவுக் குறிப்புப் பத்திரம் கொடுப்பனவுப் பதிவேட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2013 ஏப்ரல் 30 அந்திகதிய 12/ஆ/06/01/ (வாகனம்) ஆம் இலக்க கடிதத்தில் சபைக்குரிய 252-6335 ஆம் இலக்க கப் வாகனத்தை பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படும் வரையிலும் 2013 மே 01 ஆந் திகதி முதல் 14 வரை அதாவது இரண்டு வாரங்களுக்காக யூபி-எம்பீ 4790 ஆம் இலக்க டொயட்டா வான் வாகனம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் மே தொடக்கம் ஆகஸ்ட் 27 வரை வாகனத்தைப் பயன்படுத்தி அதற்காக 2850.3 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 346,026 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அந்தக் காலப் பகுதியின் போது சபைக்குரிய 252-6335 ஆம் இலக்க கப் வாகனத்திற்காக 745 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 90,443 தொகையான செலவினமும் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது 05 சந்தர்ப்பங்களில் பல்வேறு செயற்பாடுகளுக்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 74,150 தொகை செலவில் தனியார் வாகனம் வாடகைக்குப் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக உள்ளுராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,674,949 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,199,078 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வாடகை

புதிய நவீன சந்தைத் தொகுதியில் 32 மொத்தக் கடைகளில் 7 கடைகள் மீளாய்வாண்டில் கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 சினிமா மண்டப வாடகை

சபைக்குரிய ஜே.எம். குமரதாச மாநாட்டு மண்டபத்தில் சினிமா காட்சிகளைக் காண்பிப்பதற்காக நபர் ஒருவருக்கு 2011 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் 05 வருட காலத்திற்கு வாடகைக்கு வழங்குவதற்காக பெறுமதி சேர் வரி மற்றும் முத்திரைக் கட்டணம் உள்ளடங்கலாக ரூபா 65,492 தொகை பாதுகாப்பு பிணை வைப்பு பெறப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2014 யூன் 16 ஆந் திகதி வரையிலும் சினிமா மண்டபம் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் அதன் மூலம் சபைக்கு எந்த வருமானமும் கிடைத்திருக்கவில்லை.

#### 2.2.3 வெல்லவாய வாராந்த சந்தை வாடகை

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 177 மற்றும் 178 ஆம் இலக்கங்களின் பிரகாரம் 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக வெல்லவாய வாராந்த சந்தை முன்னைய ஆண்டில் வாடகைக்கு வழங்கப்பட்ட தொகையான ரூபா 1,920,000 தொகையில் கேள்வி கோரப்படாமல் மீளாய்வாண்டின் போதும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) வெல்லவாய வாராந்த சந்தையில் மாதாந்த வாடகைத் தவணைப் பணமான ரூபா 160,000 தொகை அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையினால் மீளாய்வாண்டின் போதும் ரூபா 29,783 தொகையான தாமதத் தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.4 மாட்டிறைச்சிக் கடை வாடகை

மீளாய்வாண்டின் சனவரி 31 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தில் வெல்லவாய மாட்டிறைச்சிக் கடையை வாடகைக்கு வழங்குவதற்காக பிரதேசத்திலுள்ள குறிப்பிட்ட நிறுவனத்தினால் ரூபா 1,000,000 தொகையில் கோரப்பட்ட கடிதம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் இந்த மாட்டிறைச்சிக் கடையை ரூபா 811,250

தொகையில் வாடகைக்கு வழங்குவதற்கு 2013 சனவரி 30 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபைக்கு ரூபா 188,750 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**2.2.5 கடல் நீர் நன்னீர் மீன் கடை வாடகை**

மீளாய்வாண்டிற்காக கடல் நீர் நன்னீர் மீன் கடையை ரூபா 500,000 தொகையில் குறிப்பிட்ட வாடகையாளருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட திகதியில் உள்ளவாறு வாடகைப் பணம் செலுத்தாமையின் அடிப்படையில் அறவிட வேண்டிய ரூபா 19,041 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 ஏனைய வருமானம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் செயற்பாட்டிற்காக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது அந்த அதிகாரசபையில் அங்கீகரிக்கப்பட்ட பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 01 ஹொட்டேல் மற்றும் 04 தங்குமிடங்களிலிருந்து உரிய ஆண்டிற்கு முன்னைய ஆண்டின் பெறுவனவுகளில் 1% சதவீதத்தை விஞ்சாத கட்டணமொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்ற தண்டப்பணம் | 15,505,533 |
| முத்திரைக் கட்டணம் | 1,442,800 |

**2.3 மிகை அறவீடு**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புவாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை அறவீடுகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 70,338 தொகை அறவிடவேண்டியிருந்தது.

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டிற்காக பஸ் நிலையத்தின் பொது மலசல கூடத்தை ரூபா 220,000 தொகையான வருடாந்த வாடகைத் தொகையில் வாடகையாளர் ஒரவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் 18 ஆவது பிரிவின் பிரகாரம் மாதாந்த மின்சாரக் கட்டணம் வாடகையாளரினால் செலுத்த வேண்டியிருந்த போதிலும் 2013 சனவரி முதல் யூலை வரை மின்சாரக் கட்டணமாக 7பா 25,860 தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

**2.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

புதிய கடைத் தொகுதியின் திறந்தவெளிக்குரிய மின்விளக்குகளுக்கான மாணி இலக்கம் 7301034 இற்குரிய மன்சார பாவனைக்காக 2013 சனவரி முதல் ஒக்தோபர் வரை ரூபா 72,867 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 12 ஆந் திகதி

பி.ப 12.45 இற்கு இந்த மாணியைப் பரிசோதனை செய்தபோது திறந்தவெளிக்குரிய மின் குமிழ்கள் சகலதும் ஓய்வடையச் செய்யப்பட்டிருந்தும் மாணி செயற்படுநிலையில் காணப்பட்டது. அதன் பிரகாரம் இந்த மின்சார வழங்கலுக்காக பயன்படுத்தப்பட்ட மின்சார அளவினைவிட கூடுதலான அளவு செலுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 2.6 செயற்பாடற்ற சொத்துக்கள்

சனாதிபதி செயலாளரின் 2013 யூன் 05 ஆந் திகதிய பீசீஎம்டீ/பீஆர்/2013 ஆம் இலக்க கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான பாவனைக்கு எடுக்க முடியாத 03 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(அ) கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக செயல்நடவடிக்கைத் திட்டம் சபையின் மூலம் தயாரிக்கப்பட்டு அதற்கான காணிக்கு வருடாந்த நானாவித அனுமதிப்பத்திரமான காப்புறுதி திணைக்களத்திலிருந்து 2012 சனவரி 16 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கழிவப் பொருட்களை அகற்றும் போது அகற்றப்படுகின்ற இடத்தில் பொலித்தீன் போன்ற கழிவுப் பொருட்கள் பிரதேசம் முழுவதும் பரவிச் சென்றமையினால் சுற்றாடலுக்கு சேதத்தினை ஏற்படுத்தும் நிலை தோன்றியிருந்தது.

## 2.8 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் ஆண்டின் உள்ளபடியான வருமானம், செலவினம் என்பவற்றிற்கிடையே காணப்படுகின்ற கவனத்திற் கொள்ளக்கூடிய முரண்களின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்